தி/மு/ஸ்ரீ சண்பக மகா வித்தியாலயம்

முதலாம் தவணைப் பரீட்சை – 2024

புள்ளி

தரம் - 10 | **22-T-I** | **தமிழ் மொழியும் இலக்கியமும்**

பெயர் : ..... நேரம் : 1 மணித்தியாலம்

பகுதி -I

- **சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1) 'எழுந்தகெழுங்கணல் என்ன' இங்கு **கணல்** என்பது?
(1) நெருப்பு (2) வளி (3) நீர் (4) காற்று

2) "புல்லர் நல்லோரைக் கண்டேன்" இதில் **புல்லர்** என்பது?
(1) நல்லவர் (2) அறிவுடையோர் (3) அறிவற்றவர் (4) உயந்தவர்

3) "தேம்படும் பனையின் திரள்" இங்கு **தேம்** என்பது?
(1) தேன் (2) உயர்ந்து (3) அழகு (4) இனிமை

4) "மாகம் மடங்களும் மாள்விடை" இங்கு மாகம் என்பது ?
(1) சிறுமை (2) பெருமை (3) யானை (4) எருது

5) "வெருளி பொங்கு பகைவரை நிந்திப்பார் இதில் வெருளி என்பது ?
(1) சிரிப்பு (2)பொறாமை (3) கோபம் (4) அறிவு

6) பின்வரும் சொற்களில் எதிர்கருத்து சொற்களின் இணைப்பு அல்லாதது?
(1) நாணம் - வெட்கம் (2) இளமை – முதமை
(3) இணக்கம் - பிணக்கம் (4) தொற்றம் - மறைவு

7) பின்வரும் சொற்களில் எதிர்கருத்து சொற்களின் இணைப்பு அல்லாதது?
(1) இன்சொல் - வன் சொல் (2) பண்டிதர் - பாமரர்
(3) தோற்றம் - உதயம் (4) அனுகூலம் -பிரதிகூலம்

8) "காகம் கறுப்பு நிறப்பறவை" இது ?
(1) கலப்பு வாக்கியம் (2) கூட்டு வாக்கியம்
(3) தனி வாக்கியம் (4) இணைப்பு வாக்கியம்

9) பின்வரும் சொற்களில் "க" ஒலிப்பு முறை வேறுபடும் சொல்?
(1) சகன் (2) மகன் (3) ஏகன் (4) தீங்கு

www.ikeou.lk

zoom Online வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை



" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- கணிதம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- பேச்சு சிங்களம்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் | தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

10)''ஏன் கொண்ணன்ரைபெண்சாதி'' இதில் பெண்சாதி என்பதன் திருத்தமான வடிவம்?
(1) மனைவி (2) மகள் (3) மருமகள் (4) பெண்

11) பகுதபத உறுப்புக்கள் அனைத்தும் உள்ளடங்கியுன்ன சொல் எது?
(1) உண்டனன் (2) நடந்தனன் (3) ஓடினான் (4) ஊரன்

12) பின்வரும் பெயர் எச்ச விகுதி எது?
(1) வந்து (2) போய் (3) யார் (4) செய்யும்

13) உறவுமுறை கடித அமைப்பில் உள்ளடங்காதது?
(1) உள்முகவரி (2) முகவரி (3) உடல் (4) ஒப்பம்

14) இரண்டாம் வேற்றுமை உருபு இடம்பெற்றுள்ள சொல் எது?
(1) வீட்டை (2) காடு (3) மரத்தால் (4) என்னுடன்

15) ''வீட்டிற்கு முன் நதி ஓடுகிறது''என்பதில் நான்காம் வேற்றுமைப் பொருளில் வந்துள்ளது?
(1) கோடை (2) பகை (3) எல்லை (4) தகுதி

16) நெல் - நாற்று என்பது போல் பனை
(1) குட்டி (2) குன்று (3) வடலி (4) பிள்ளை

17) ஆசிரியர் - குழாம் என்பது போல புத்தகம்
(1) கட்டு (2) தொகுதி (3) குவியல் (4) அடுக்கு

18) மனே என்பதன் நிய வழக்கு சொல்?
(1) மக்கள் (2) மானே (3) மகனே (4) மோன

19) பசுந்து என்பதன் நியவழக்கு சொல்?
(1) பசுமை (2) பின்பு (3) அழகு (4) பந்து

20) ''அம்மா உணவு சமைத்தான்'' என்பது?
(1) எண்வழு (2) பால்வழு (3) இடவழு (4) காலவழு

21) ஐயை என்பதன் எதிர்பால் சொல்?
(1) ஐயன் (2) மையன் (3) தமயன் (4) ஐயப்பன்

22) பாலா செக்கசிவந்த ஆடை அணிந்தான்?
(1) இரட்டைக்கிழவி (2) அடுக்கிடுக்குதொடர்
(3) இணைமொழி (4) பெயரடை

www.lkedu.lk

23) ''கண் வளர்த்தல்'' எனும் மரபுத்தொடரின் பொருள்?

(1) ஏமாற்றுதல் (2) வெட்கித்தல் (3) அகப்படல் (4) நித்திரை செய்தல்

24) பானை குயவரால் வனையப்பட்டது. இவ் வாக்கியத்தில் வந்துள்ள எழுவாய் எது ?

(1) குயவன் (2) வனையப்பட்டது (3) பானை (4) மனிதன்

25)''நதி புத்தம் புதிய ஆடை வாங்கினாள்'' இதில் புதிய ஆடை என்பது?

(1) வினையடை (2) ஆக்கிப்பெயரடை (3) இரட்டைக்கிழவி (4) பெயரடை

26) பெயராகவும் வினையாகவும் வரும் சொல்?

(1) கல் (2) உண் (3) அழகு (4) அஜிவு

27) போனான் என்பதை பிரித்தால்?

1) போ ன் ஆன் 2) போ இன் அன் 3) போன இன் 4) போ ன் ன்

28) நண்பரோடு சென்றான் என்பது

(1) 1ம் வேற்றுமை (2) 2ம் வேற்றுமை (3) 3ம் வேற்றுமை (4) 4ம் வேற்றுமை

29) ''கவலையால் வாடினான்'' என்னும் வாக்கியம் எப்பொருளில் வந்துள்ளது?

(1) கலப்புறுப்பொருள் (2) அடைமொழிப் பொருள்

(3) வரையறைப் பொருள் (4) காரணப் பொருள்

30) அம்மா சந்தைக்கு போய் மரக்கறி வாங்கினாள். இது எவ்வகை வாக்கியம்?

(1) தனிவாக்கியம் (2) கூட்டு வாக்கியம்

(3) கலப்பு வாக்கியம் (4) தொடர் வாக்கியம்

31) ''நீயோ அவனோ யார் இதைச்.....?

(1) செல்தார் (2) செய்தான்

(3) செய்தார்கள் (4) செய்வான்

32) காகங்கள் கூட்டம் கூட்டமாக..... ?

(1) சென்றது (2) செல்கிறது (3) செல்லாது (4) சென்றது

33) ஒரு சொல் இரு பொருள் தருவது?

(1) சிலேடை (2) உவமை (3) எதுகை (4) மோனை

34) முதல் எழுத்து ஒன்றித்து வருவது?

(1) எதுகை (2) மடக்கு (3) சிலேடை (4) மோனை

www.lkedu.lk

35) ஐவகை புலன்களாவன?

(1) நீர், நிலம், காற்று, ஆகாயம், தீ

(2) மெய், வாய் ,கண் ,மூக்கு ,செவி

(3) குறிஞ்சி ,முல்லை, மருதம், பாலை, நெய்தல்

(4) சுவை, ஒலி ,ஊறு, நாற்றம், ஓசை

36) முனிவர் வசிப்பதற்கு இலை தழை கொண்டு வேயப்பட்ட குடிசை ?

(1) குடிசை (2) குடில் (3) பன்னசாலை (4) ஓலைகுடில்

37) "பூத்த ஜோதி வதனம்" என்பது எவ்வகை அணி?

(1) உவமை அணி (2) உருவகஅணி

(3) தற்குறிப்பேற்ற அணி (4) உயர்வு நவிச்சி

38) Whatsapp (வாட்ஸ்அப்) என்பதன் தமிழ் வடிவம்?

(1) காயலை (2) புலனம் (3) முகநூல் (4) வலையொலி

39) வெற்றிலை என்பதை பிரித்தால் வருவது?

(1) வெற்று இலை (2) வெற்றி இலை

(3) வெறுமை இலை (4) வெற்று இலை

40) பந்தியமைப்பிற்கு மிகப் பொறுத்தமான வைப்பு முறை யாது?

(அ) மனிதனின் மதிப்புயர்வு மனிதசமூகத்தை மாற்றியமைக்கும் உறுதி என்பன அவையாகும்.

(ஆ) கைத்தொழில் வளர்ச்சி நகரமயமாக்கல் என்பவற்றால் பொருளாதாரம் சமூக அரசியல் துறைகளில் மாற்றம் இடம் பெற்றன

(இ) தன் விதியை நிர்ணயிக்க வல்லவனாக மனிதன் இன்று நோக்கப்படுகிறான்

(ஈ) அவற்றுள் முக்கியமாக மனங் கொள்ளப்படவேண்டியவை இரண்டாகும்.

(உ) இதனால் சுதந்திர சகோதரத்துவ சமத்துவம் முக்கியம் பெற்றன

(1) ஆ ஈ அ உ இ (2) ஆ அ இ உ ஈ

(3) ஈ அ உ ஆ இ (4) ஆ ஈ அ இ உ

(40x1 = 40 புள்ளிகள்)

www.lkedu.lk

தி/மு/ஸ்ரீ சண்பக மகா வித்தியாலயம்

முதலாம் தவணைப் பரீட்சை – 2024

புள்ளி

தரம் - 10 | **22-T-II** | **தமிழ் மொழியும் இலக்கியமும்**

பெயர் : ..... நேரம் : 2 மணித்தியாலங்கள்

பகுதி -II

- **கவனிக்கவும்.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
   1. "புனலருவி கழங் கெனமுத் தாடும்" இத்தொடரை சந்தி பிரித்து எழுதுக.
   2. கணி, கனி இச்சொற்களின் கருத்துப் புலப்படுமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
   3. பின்வரும் தனி வாக்கியங்களைக் கூட்டு வாக்கியங்களாக்குக.
      1. மிகப் பழமையான மரபிலக்கணத்தைக் கொண்டது தமிழ் மொழி
      2. தமிழ் மொழி கேட்பதற்கு மிகவும் இனிமையானது.
   4. "ஏன் மோனே, நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லையாம்" எனும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
   5. தொழின் முறைக் கடிதமொன்றின் முக்கிய அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   6. பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.
      ஒரு இடமும் போகயில்லை மச்சாள் சும்மா வெளியாலை போய் விளையாடப் போறன்
   7. பின்வரும் சொற்களுள் ககரம் மாற்றொலியாக ஒலிக்கும் சொற்களை தெரிவு செய்து எழுதுக.
      (கட்டில், கடை, பங்கம், கடல், காகம், மேகம், தீங்கு)
   8. பின்வரும் சொற்களின் எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.
      1. மருத்துவன்
      2. வீரன்
   9. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்பவற்றைக் குறிப்பிடுக. "எனக்கு வீட்டிலை வேலை கிடக்கு" என்று அழாக் குறையாகச் சொல்லி விட்டு எடுத்தேன் ஓட்டம் நான்.
   10. ராதிகாவும் கணவனும் துன்பக் கேணியில் நீந்தினார்கள்
      1. இதில் இடம்பெற்றுள்ள அணி எது
      2. அதனை விளக்குக.

(2x10=20 புள்ளிகள்)

www.ksou.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள், செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்

இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

1. நாம் உண்ணும் உணவே எமது ஆராக்கியத்திற்கு அடிப்படையாகும். ஆனால் இன்றோ உணவுப் பழக்க வழக்கங்கள் தவறானவையாக காணப்படுகின்றன. அதனால் உடலின் ஆராக்கியமும் பாதிப்படைகின்றது. எனவே எமது உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றியமைக்க வேண்டிய முறைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு ஒரு விளக்கக் கட்டுரை.

2. உலகில் நாம் கண் கண்ட தெய்வம் தாயாகும். எந்த ஒரு உயிரினமும் தாயில்லாமல் பிறக்க முடியாது. தாயின் அன்புக்கு நிகராக உலகில் அன்பு காட்டக்கூடிய ஜீவன் இல்லையெனலாம். ஆனால் தாய் என்ற உறவின் உன்னதத்தை நாம் உணர்வதில்லை. இவ்விடயங்களை உள்ளடக்கி சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு நீர் நிகழ்த்திய உரை.

3. சேமிப்பு என்பது மனிதனுக்கு அவசியமானது. சேமிக்கப் பழகாதவன் எதிர்காலத்தில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக நேரிடும். எனவே எமக்கு கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமிப்பது இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தி இருவருக்கிடையில் நடைபெறும் உரையாடல்.

4. தனது படிப்பை முடித்து விட்ட கமல் வேலைத் தேடி அலைகிறான். தனது தகுதிக்குத்தக்க வேலை கிடையாது மனம் தளர்ந்த நிலையில் தன் விவசாயியான அப்பாவும் இறந்து விடுகிறார். தாயையையும் இழந்திருந்த கமல் தன் இரு தங்கைகளுக்கும் தம்பிக்கும் வாழ வழிகாட்ட வேண்டிய நிலையில் தத்தளிக்கிறான். இதன் பிறகு நடப்பவற்றை சுவை பட விளக்குமாறு கற்பனை சிறுகதை ஒன்றை எழுதுக.

3) கீழ்க்காணும் உரைப் பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையுமாறு எழுதுக.

நமது மொழி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இருவகை வழக்குகளைக் கொண்டது. இவ்விரு வழக்குகளினதும் சிறப்பியல்புகள் தனித்துவமானவை. பேச்சு வழக்கில் அவரவர் பிரதேச மொழியை சுவையுணர்வோடும், நேயத்தோடும் ஒவ்வொருவரும் பயன்படுத்துவது இயல்பானது. இதன் காரணமாகவே அவ்வவ் பிரதேச மொழியை பேசுவேபோராராராலேயே அதனதன் சிறப்புத் தன்மைகளைப் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியும். ஒரு பிரதேசத்தின் பேச்சு வழக்குடன் பரீட்சயப்படாத ஒருவரால் அவ்வழக்குக்கு உரித்துடையவர் விளங்கும் அளவுக்கு உணர்வு பூர்வமாக விளங்க முடியாத நிலைமையும் இருக்கலாம். இதற்குக் காரணம் பேச்சு மொழியானது வார்த்தைக்குப் புறத்தே அவ்வவ் பிரதேச, சமூக, பண்பாட்டுச் சூழ்நிலைக்கேற்ற கருத்தைக் கொண்டிருப்பதாகும்.

நடைமுறையில் நாம் பல்வேறு பிரதேசத்தவர்களுடன் கலந்துரையாடுகின்றோம். தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகத் தொடர்பாடுகின்றோம். இந்நிலையில்

பல்வேறுபட்ட பிரதேச வழக்குகள் பற்றியும் நுணுக்கமாக அறிந்திருப்பது அவசியமே. நாம் கலந்துரையாடிய விடயங்கள் பலவற்றையும் நாம் செவிமடுத்த விடயங்கள் பலவற்றையும் எழுதுகின்ற சந்தர்ப்பங்களும் அதிகம் உள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட பிரதேச பேச்சு வழக்குகள் பற்றி அறிந்திருப்பது பயன் தரும்.

4) பின்வரும் உரைப் பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

விஞ்ஞானி என்பவன் நுணுகி ஆராய்கிறவன். பொறியிலாளன் எனப்படுபவன் ஏற்கனவே இல்லாத ஒன்றைப் புதிதாகப் படைப்பவன். தொழில்நுட்பவியலாளன் கருத்துக்களையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்துபவன், அத்துடன் சமூகம் தொடர்பான தனது பொறுப்புக்களையும், கடமைகளையும் உணர்ந்தவன். விஞ்ஞானக் கல்வி இம்மூன்று இயல்புகளையும் மாணவர்கள் பெறும் வகையில் திட்டமிடப்படல் வேண்டும் என்பது கல்வியலாளர்கள் கருத்து. போசாக்கின்மை, நோய், பிணி, எழுத்தறிவின்மை, வேலையின்மை, சமத்துவமின்மை என்பவற்றைப் படிப்படியாகக் குறைத்து, இறுதியாக இல்லாதொழிப்பது அபிவிருத்தி எனப்படும். இவ்வாறான முன்னேற்றத்தை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான போராட்டம் வெற்றியடைய விஞ்ஞானக் கல்வி உதவ வேண்டும்.

1. தொழினுட்பவியலாளன் என்பவன் யார்?

.....

2. அபிவிருத்தி எனப்படுவது யாது?

.....

.....

.....

.....

3. விஞ்ஞானக் கல்வி தொடர்பாக கல்வியலாளர் கருத்து யாது?

.....

.....

.....

.....

.....

4. விஞ்ஞானிக்கும் பொறியியலாளனுக்கும் இடையிலான வேறுபாடு யாது?

.....

.....

.....

.....

5. விஞ்ஞானக் கல்வி எதற்கு உதவ வேண்டும் என கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்?

.....

.....

.....

.....

.....

.....

www.ikeduk

5) இன்றைய கால கட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதால் சமூகம் பல சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்கின்றது. இதனைக் கருத்திற் கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் 100 சொற்களில் துண்டுப்பிரசுரம் எழுதுக.

அல்லது

நீர் வாழும் பிரதேசத்தில் உள்ள பிரதான வீதி சேதமடைந்து வாகனப் போக்குவரத்து உகந்ததாக இல்லை. இதனால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், அலுவலர்கள்எனப் பலரும் பாதிப்படைகின்றனர். எனவே அவ்வீதியைப் புனரமைக்க உடன் நடவடிக்கைகள் எடுக்கும்படி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

(15 புள்ளிகள்)

www.lkedu.lk

தி/மு/ஸ்ரீ சண்பக மகா வித்தியாலயம்

முதலாம் தவணைப் பரீட்சை – 2024

புள்ளி

தரம்-10 | **22-T-III** | **தமிழ் மொழியும் இலக்கியமும்**

பெயர் : ..... நேரம் : 3 மணித்தியாலங்கள்

- கவனிக்கவும்.
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக

(1) சுருக்கமான விடை தருக

1) "கமல மது உண்ணும்"
அ. கமலம் என்பதன் பொருளைத் தருக.
ஆ. மது என்பது எதனைக் குறிக்கின்றது?

2) அ. வெற்றி வேட்கை என்ற நூலின் ஆசிரியர் யார்?
ஆ. அப்பாடலில் குறிப்பிடப்படும் பிரதான கருத்து யாது?

3) "உப்பில்லாக் கஞ்சினையுண்ணு மறுசுவை போல்" இத்தொடரை சந்தி பிரித்து எழுதுக

4) அ. முதுமொழி வெண்பாவின் ஆசிரியர் யார்?
ஆ. முதுமொழி வெண்பா என பெயர் வரக் காரணம் யாது?

5) அ) நீதி நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக
ஆ) அவை எந்த யாப்பில் எழுதப்பட்டுள்ளன?

6) அ) ஆறுமுக நாவலர் கூட்டத்திற்கு தலைமை வகிக்காததன் காரணம் யாது?
ஆ) அக்கூட்டத்திற்கு கட்டுரை ஆசிரியர் இட்ட பெயர் என்ன?

7) அ) "பொன்னாகமும் நாகமும் நாண நடந்தார்" இதில் நாகம் என்பதன் இரு பொருளையும் எழுதுக.
ஆ) இவ்வாறு நாண நடந்தவர் யார்?

8) "மணி நித்திலம் புன்னகை சுடர் வீசிட"
அ) இப்பாடல் வரியில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
ஆ) அவ்வணியை விளக்குக.

9) "புலங்களோடு கரணமும் ஆவியும்"
அ) இங்கு குறிப்பிடப்படும் புலங்கள் எவை?
ஆ) காரணங்கள் எவை

10) "விதியை நோவார். தன் நண்பனைத் தூற்றுவார். வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பார்"
அ) இங்கு குறிப்பிடப்படும் மனிதனின் இழிவான குணங்கள் இரண்டு தருக.
ஆ) வெகுளி என்பதன் பொருள் யாது?

(2x10=20 புள்ளிகள்)

www.ikeau.lk

மாதத்தின் முதல் வாரம் தரம் 06 தொடக்கம் 11 வரையான
தமிழ் மீடியம் வகுப்புக்கள் இலவசம்
விரும்பியவர்கள் பங்குபற்றலாம்

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

Face book - https://www.facebook.com/learneasylk

வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

(2) பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைப் பகுதிகளையும் வாசித்து கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு மூத்தோரை யில்லா னவக்களனும் - பாத்துண்ணுந் தன்மையிலான ரயலிருப்பு மிம் மூன்று நன்மை பயத்த லில

அ) இப்பாடல் பெரும் இலக்கியம் யாது? எழுதியவர் யார்?

ஆ) இப்பாடலில் இடம்பெறும் நீதிக் கருத்துக்களை எழுதுக.

2) யானை அனையார் நண்பொரீஇ நாயனையார் கேண்மை கெழிஇக் கொளல் வேண்டும் - யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல் மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ) இப்பாடலில் கூறப்படும் பிரதான கருத்து யாது?

ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள உவமையணி ஒன்றினை விளக்குக.

3) காத்திருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழகார்ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மங்காங்கிழுப்
புற்றெனக் கோத்த சிந்தனையோடேகி
யதில் மகிழ் கொண்டு நாட்கள்
பல கழித்திட்டனன்
பூத்த கோதி வதனம் திரும்பு மேல்
புலனழிந்தொரு புத்துயி ரெய்து வேன

அ) இப்பாடலில் பாரதி சிறுமி மீது கொண்ட காதல் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?

ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியை விளக்குக.

4) விஸ்வநாதப்பிள்ளை மகா விவேகி, கணித மேதை, தாமோதரப் பிள்ளைக்கு ஆசிரியர். வாதம் செய்வதில் பெரிய சாமர்த்தியவான். நாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மூத்தவர். நாவலர் அவர்களும், பிள்ளையும் இளமை தொடக்கம் பத்திரிகை வாயிலாக பல விடயங்களில் வாதம் செய்து வந்தவர்கள். நாவலர் அவர்களை எதிர்த்து நின்று பல கண்டனப் பத்திரிகைகளை பதித்து வெளியட்டவர். அவர் ஒரு முறை சிதம்பரத்தில் நாவலருடன் நேரில் வாதம் செய்து நாவலரின் கொள்கைகளுக்கு இணங்கி அவர்களிடம் மதிப்பு வைத்து அன்று தொடக்கம் நாவலரை குருவாக ஏற்றுக் கொண்டவர்.

அ) விஸ்வநாதப் பிள்ளையின் சிறப்புக்களை எழுதுக.

ஆ) ஆறுமுக நாவலருக்கும், விஸ்வநாதப் பிள்ளைக்கும் இடையில் உறவு எவ்வாறு காணப்பட்டது?

(4x5=20 புள்ளிகள்)

www.ikedu.lk

(3) நீதிப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு,

அ) வாக்குண்டாம் பாடலில் அடக்கமுடையாரின் சிறப்பு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?

ஆ) இனியவை நாற்பதில் இனிதான விடயங்களைப் பற்றி கூறும் சிறப்பினை எடுத்துக் காட்டுக.

(7+8=15 புள்ளிகள்)

(4) "நாவலர் எழுந்தார்" என்ற கட்டுரையில்,

அ) நாவலர் எழுந்த காட்சியையும், நடந்த விதத்தினையும் பற்றி கட்டுரை ஆசிரியர் எடுத்துக் காட்டும் விதத்தினை விளக்குக.

ஆ) அருணந்தி சிவாச்சாரியார் பற்றி கட்டுரை ஆசிரியர் கூறியிருப்பதற்கான காரணம் யாது?

(8+7=15 புள்ளிகள்)

(5) "பாரதியார் சுயசரிதையில்"

அ) நீர் எடுத்து வரும் சிறுமிக்காக பாரதியார் காத்திருந்த விதம் பற்றி எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

ஆ) விரும்பும் எதனையும் எப்படிப்பட்டவர்களால் பெற முடியாது என பாரதியால் எவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

(5+5=10 புள்ளிகள்)

www.lkedu.lk